Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ் ISSN: 3049-0723 (Online)
A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal

Volume 1, No. 07, April 2025

# FLOWERS IN THE VELLPARI NOVEL

**Mrs.R.Amutha[1], Dr.G.Mahalakshmi[2],**

1. *Research Scholar, Tamil Department, Dr.S.N.SRajalskshmi College of Arts and Science,(Autonomous) Coimbatore-641049.*
   *Email – tamilamutha25@gmail.com*
2. *Assistant Professor, Tamil Department, Dr.S.N.SRajalskshmi College of Arts and Science,(Autonomous) Coimbatore-641049.*
   *Email – nmaha.phd@gmail.com*

**ABSTRACT**

Literature is not merely a medium for reading; it is a profound reflection of life itself. As a mirror to human experience, it captures the nuances of existence in all its dimensions. In this light, Veerayuga Naayagan Vel Paari, a novel by Su. Venkatesan, emerges as a significant work that bridges the historical with the contemporary. Although the novel is a relatively modern form in the evolution of literary genres, it continues to draw depth, richness, and meaning from the legacy of ancient traditions. This study seeks to explore how the novel employs elements of nature—particularly flowers—to symbolize the primacy and spiritual depth of the inner life. Through a close reading, the research identifies and analyzes flowers such as the mayilai flower, panam flower, kanthal flower, irupai flower, alaripoo, mullipoo, koothali flower, vengai flower, thalai flower, aeruzham flower, kongu flower, eruvai flower, and kamukup flower. Each of these is examined not only for its botanical identity but also for its metaphorical and cultural significance within the narrative. Ultimately, this study illustrates how nature—through floral imagery—serves as a vital conduit for expressing emotional, spiritual, and philosophical themes in the novel.

**Keywords:** Mullipoo Flower, Koothalimalar Flower, Erulham Flower, Gongbu Flower, Eruvai Flower

# வேள்பாரி புதினத்தில் பூக்கள்

**ரா.அமுதா[1], முனைவர்.கோ.மகாலட்சுமி[2]**

1. *பகுதிநேர முனைவர் பட்டஆய்வாளர், டாக்டர் எஸ்.என்.எஸ். ராஜலட்சுமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை-641049.*
2. *ஆய்வுநெறியாளர், டாக்டர் எஸ்.என்.எஸ். ராஜலட்சுமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை-641049.*

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியம் என்பது வாசிப்போடு நிற்பதன்று அதுவாழ்க்கை என்பதை யாவரும் அறிதல் அவசியமானது. அவ்வகையில் புதினஇலக்கியம் பிற்கால இலக்கியவடிவமாக இருப்பினும் அது பழமையை தாங்கியே இலக்கிய உலகில் வலமும் வளமும் பெறுகிறது. அவ்வாறு நோக்குங்கால் சு.வெங்கடேசனின் வீரயுகநாயகன் வேள்பாரி புதினம் இடம்பெற்றுள்ளது. அகவாழ்க்கை நிகழ்வுகளில் இயற்கை பெறும் இடம் என்பது முதன்மையும் சிறப்பும் பெற்று விளங்குகின்றது என்பதை பூக்களோடு எடுத்துக்காட்டியுள்ளமையை விளக்குவதே இந்த ஆய்வாகும். இந்த ஆய்வுமயிலைபூ, பனம்பூ, காந்தள்பூ, இருப்பைப்பூ, அலரிப்பூ, முள்ளிப்பூ, கூதாளிமலர், வேங்கைப்பூ, தாழைப்பூ, ஏறுழம்பூ, கோங்குபூ, எருவைப்பூ, கமுகுப்பூ போன்ற பூக்களை விரிவாக விளக்குவதோடு அகவாழ்க்கையில் எவ்வித இடம்பெறு கின்றது என்பதையும் விளக்குவதாக அமைகின்றது.

**முன்னுரை**

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டனர். வாழ்க்கையை அகம், புறம் எனப்பிரித்துக் காட்டியதுடன் வாழ்வியலை ஐந்திணைகளுக்கும் அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு திணைக்கும் அந்நிலப்பகுதியில் சிறந்து விளங்கும் பூ அல்லது மரத்தின் பெயரை இட்டு மகிழ்ந்தனர். ஒவ்வொரு அகத்தினை பாகுபாட்டிற்கும் ஒரு புறத்திணை பாகுபாடு உண்டெனக் கண்டு அப்புறத்திணைகளுக்கு பூக்களின் பெயரிட்டு மகிந்தனர்.

சங்ககால மக்கள் இயற்கையின் எழில்களை இயல்புகளை நன்குணர்ந்திருந்தார். நுண்மான் நுழைபுலன் கொண்டு ஒவ்வொன்றையும் ஆராய்ந்து தம் செய்யுட்களில் உரிய இடங்களில் பயன்படுத்தினர். புலவர் நாவிற் பொருந்திய பூக்கள் தமிழ் இலக்கியத்தில் நூறு எண்களையும் கடந்து நிற்கின்றன. சங்கக் கவிஞர் முதல் இக்காலக் கவிஞர்கள் வரை யாவரும் மலர்களை இலக்கியங்களில் பதித்துள்ளனர். சு.வெங்கடேசன் புதினத்திலும் பல்வேறு காலங்களில் உள்ள பூக்களைப் பற்றி எடுத்தாண்டுள்ளார் அதைப் பற்றிய தகவல்களைப் பற்றி விரிவாகக் காண்பதே இவ்வாய்வு.

**திறவுச்சொற்கள்:** மயிலைபூ, பனம்பூ, காந்தள்பூஇருப்பைப்பூ, அலரிப்பூ,முள்ளிப்பூ, கூதாளிமலர், வேகைப்பூ, தாழைப்பூ, ஏறுழம்பூ, கோங்குபூ, எருவைப்பூ, கமுகுப்பூ

**பூக்கள் - வரலாறு**

பூக்கள் யாவும் இடத்திற்கு இடம் நாட்டுக்கு நாடு வெவ்வேறு விதமான பருவத்திற்கு ஏற்ப பூக்கும் தன்மை பெற்றதாக உள்ளன. எங்கு காணினும் பூக்கள் மிகுதியாக உள்ளமையை குறிஞ்சிநிலப்பகுதியில் கபிலர் விளக்குவது குறிஞ்சிப்பாட்டில் அறிய முடிகிறது. அவ்வாறு அன்றைய காலங்களில் எங்கு காணினும் காணக்கிடைத்த பூ வகைகள் இன்று அரிதாக பூங்காக்களிலும், தோட்டக்கலைகளிலும் வைத்து பாதுகாக்கப்படும் அளவிற்கு மாற்றம் அடைந்துள்ளது.

பூக்கள் உலக மறைகளிலும், அயற்காவியங்களிலும், நாகரீகங்களிலும் பழக்க வழக்களிலும் இடம் பெற்றிருக்கும் சிறப்பினையும் தொல்காப்பியத்தும் அகத்தும், புறத்தும் தமிழர் வாழ்விலும், தமிழிலும் மலர்கள் பாங்கொடு பண்பும் பெற்றிருக்கும் ஆட்சியினையும் அறியலாம்.

**மயிலைமலர்**

மயிலை என்னும் இயற்பெயர் கொண்ட இக்கொடிப்பூ முல்லை நிலத்தில் வெண்மை நிறத்தில் கார்காலத்து நள்ளிரவில் பூத்துமணம் பரப்பி கொண்டிருக்கிறது. நள்ளிரவில் மலர்ந்து மணக்கும் காரணத்தைக் கொண்டு இம்மலர் “நள்ளிருள்நாறி” என்றழைக்கப்படுகிறது. நிகண்டுகளில் இப்பூவின் பெயர் இருவாட்சி.’மருமேவும் இருவாட்சிக்கு மயிலையும் அநங்கமும் பேர்’ என்று சூடாமணி நிகண்டு குறிக்கிறது.

“கானக்காக்கைகலிச்சிறகுஏய்க்கும்

மயிலைக்கண்ணிப்பெருந்தோட்குறுமகள்” (புறம் : 342:1 2)

ஒரு குறமகள் தன் கூந்தலின் இருமருங்கும் இப்பூவிலான கோதையைச் சூடிக்கொண்டுள்ளாள். இக்காட்சிக்கு காட்டுக் காக்கையின் தழைத்த சிறகு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இப்பூ குருதிப்போக்கிற்கு மருந்தாகப் பயன்படுகிறது.

வேள்பாரி புதினத்தில் முருகன் வள்ளியுடனான முல்லை நில காதல் வாழ்வில் நரந்தம்புற்களுக்கிடையில் அழைத்துச் செல்லும் போது நரந்தம் புல்லின் மணத்தைப் பற்றிக் கூறும்போது “மயிலம் மலர் போலத்தான் இதுவும் காயக்காய நறுமணம் அதிகமாகிக் கொண்டே இருக்கும்” என முருகன் கூறுகிறான். (ப - 378).

மேலும் நீலன் தன் காதலி மயிலாவிடம் முழுநிலா நாளில் மயிலம் பூச்சூடி அவள்மீது காதல் கொண்டான். மயிலாவை மறந்து நீலன் எவ்வியூரில் பாரி மற்றும் கபிலருடன் இருந்த நாட்களில் மயிலா நீலனைத் தேடி எவ்வியூர் வந்தபோது கபிலர் நீலனைப் பற்றி மயிலாவிடம் "நான் தங்கியுள்ள இடத்தில் தான் அவனும் தங்கியுள்ளான். அந்தப் பெண்ணுக்கு நள்ளிரவில் பூக்கும் மயிலை மலர் மிகவும் பிடிக்குமாம். முழுநிலா நாளில் மயிலம்பூச்சூடி அவள்மீது காதல் கொண்டானாம்" (ப–127) என்று கூறுகிறார்.

இருவாட்சிக்குமயிலை, அநங்கம், பெருவாய்மலர் எனப் பல்வேறு பெயர்கள் இதற்கு வழங்கப்பட்டுள்ளமையை இதன் மூலம் அறியலாம். இருளில் மலர்ந்து காதலை மலரச் செய்யும் மலராகவும், இனிய நறுமணத்தினை தருவதோடு காதலை வளர்க்கும் மலராகவும் மயிலை மலர் உள்ளது.

**பனம்பூ**

பனை,புல்லினத்தைச் சேர்ந்த ஒரு தாவரப் பேரினம். சேரமன்னரது குடிப்பூவாகப் பனையின்பூ கொள்ளப்பட்டது. 'பனை' 'போந்தை' என்ற இதன் வேறுபெயர்களைத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

"பலர்தொழவந்துமலாவிழ்: மாலை

போந்தைக்கண்ணிப்பொலம்பூதெரியல்" (சிலம்பு.ப-381)

என்ற சிலப்பதிகாரப் பாடலடிகள் வழி சேரனின் அடையாளமாலையாக பனம்பூ விளங்குவதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். அத்தோடு,

"வட்கர்போகியவளர்இளம்போந்தை" (புறம்.ப.100)

என்ற பாடலடிகள் வேளிரில் ஒருவனாகிய அதியமானைக்குறிக்கின்றது. அதியன் தன் அடையாள மாலையாகப் பனம்பூவைச் சூடினான் என்பதன் மூலம் வேளிரும், சேரவேந்தனும் பனம்பூவை அடையாளமாகக் கொண்டவர்கள் என்பதை அறிய முடிகின்றது.

பனை என்பது வெறும் அழகு அல்ல, அது ஆயுதம். ஆயுதம் மட்டுமல்ல பேரழகு என்றும், பாரிக்குப் 'பனையன்' என்ற பெயரும் இருக்கின்றது என்றும் பாரியின் குலப்பாடலே பனைமரம் பற்றியது தான் என்றும் எடுத்துக்கூறினான். மேலும்

"பனையன்மகனேபனையன்மகனே

பல்லுயிர்ஓம்பும்பாரிவேளே

திணையின்அளவேபிறவுயிர்வாடினும்

துடித்துக் காக்கும் தொல்குடி வேந்தே" ( ப– 36,37)

என்ற வேள்பாரி புதினத்தில் இடம்பெற்றுள்ள பாரியின் குலப்பாடல் மூலம் பனைமரத்திற்கும், பாரிக்கும் உள்ள தொடர்பினை அறிந்து கொள்ளமுடிகிறது. பாரியும் வேளிர்குலத்தவன் என்பதை நம்மால் அறியமுடிகிறது.

**காந்தள்பூ**

ஒண்செங்காந்தள்' என்றும், 'சுடர்ப்பூந்தோன்றி' என்றும்; 'கோடல்' என்றும் சங்க இலக்கியங்கள் சிறப்பித்துக் கூறும் காந்தள் ஒருசிறுஏறுகொடி. முந்திநிற்கும்பூ. காந்தள் ஒருவகையில் முந்தி நிற்கும்பூ ஆகும். பச்சைநாவி எனப்படும் கிழங்கைத் தரைக்கு அடியில் கொண்டது. இலைகள் அகன்று நுனிகுறுகி, பற்றுக் கம்பியாக மாறிச் சுருண்டு இருக்கும். மிகஅழகான பூக்களை உடையது. காந்தள்பூ மிகமெல்லிய, நீண்ட, ஆறு தனித்தனியாகப் பிரிந்த இதழ்களை உடையது. காந்தட்பூவை மகளிர் கைக்கும், இதழ்களைக் கைவிரல்களுக்கும் உவமித்துப் புலவர்கள்நெஞ்சை அள்ளும்கவிமழை பொழிந்துள்ளனர். 99 வகைப் பூக்களை குறிஞ்சிப்பாட்டில் பாடிய கபிலர்

"……….. வள்ளிதழ்

ஒண்செங்காந்தள்ஆம்பல்அனிச்சம்" எனக் காந்தளை முதலில் வைத்து பாடி பூக்களுக்கு விதி வகுக்கத் துணிந்தார்.

"வெண்காந்தளின்செங்காந்தள்என்றிருவிகற்பமும்

கொண்டேவழங்கும்சோடைப்பெயரே"

எனக்கோடலைச் செங்காந்தள், வெண்காந்தள்' இரண்டிற்கும் பெயராகச் சூடாமணி நிகண்டு கூறியுள்ளது .சங்கநூல்கள் செங்காந்தளையே பெரிதும் பேசுகின்றன.

"வள்ளிதழ்ஒண்செங்காந்தள்" -குறிஞ். 62

"காந்தட்குருதிஒண்பூ" -நற். 34

"குருதிப்பூவின்குலைக்காந்தட்டே" -குறுந். 1: 4

போன்ற இலக்கிய மேற்கோள்கள் செங்காந்தளைத் குறிப்பன.

"ஒண்செங்காந்தள்வாழையஞ்சிலம்பு" (நற் - 176:6.7)

"துறுகல்மீமிசைஒண்செங்காந்தள்" (குறுந் - 185:6.7) என்றெல்லாம் மலைத்தொடர்புடனே செங்காந்தள் சொல்லமைப்பு உள்ளது. இவ்வாறாக சிறப்பிக்கப்படும் காந்தள் மலைநாட்டு மக்களை கவர்ந்து அனைத்து நிலப்புலவர் பெருமக்களையும் ஈர்த்தது. காந்தட்பூ முருகனுக்குரிய அடையாளப்பூவாக விளங்குகிறது.

"சுரும்புமூசாச்சுடர்ப்பூங்காந்தள்

பொருள்தண்கண்ணிமிலைந்தசென்னியன்" என திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் தம் கருத்தினை எடுத்தாண்டுள்ளார்.

முருகனும், வள்ளியும் தமது குறிஞ்சிநில கார்கால காதல் வாழ்க்கையினை மலைகள் சூழ்ந்த நிலப்பரப்பினுள் கழிக்கும்போது மழைநின்ற ஓர் அதிகாலையில் செங்காந்தள் பூக்களைப் பார்த்த வள்ளி முருகனை அழைத்து செங்காந்தள் பூக்களை காண்பித்து" அவ்விண்மீன் கூட்டத்தின் சுடர்போல் இம்மலர் ஆறு இதழ்களைக் கொண்டுள்ளது என்றாள்."(ப–383) ஆறுவிண்மீனின் அதேகுணம் இம்மலரின் ஆறு இதழ்களிலும் இருக்கின்றன என்றான் முருகன். முருகனுக்கு உகந்ததாகவும் மலைநாட்டு மக்களைக் கவரும் மலராகவும் காந்தள் சிறப்பு பெறுகிறது.

**இருப்பைப்பூ**

இலுப்பைத் தாவரம் மது, மதுகம், மதூகம், குலிகம், சந்தானகரணி, அட்டி போன்ற இதரபெயர்களாலும் அழைக்கப்பட்டதாக பல தமிழ்நிகண்டுகள் குறிப்பிடுகின்றன. இருப்பைமரம் மிகுமணம் கொண்டது. இனிப்புச்சுவை கொண்ட மணமிக்க இப்பூ ஒரு கோட்டுப்பூவாகும். இது பாலைநிலப்பூவாகும். உள்துளையோடு சுவையும் உடைய இருப்பைப்பற்றி

"கானஇருப்பைவேனில்வெண்பூ" எனக்கூறப்படுகிறது.

"அங்கண்குறுமுயல்வெருவ, அயலகருங்கோட்டு இருப்பைப்பூ

உறக்குந்து" (புறம் - 384)

என நன்னாகனார் எனும் புலவர், குறுமுயல்கள் வெருவி இலுப்பை மரத்துக் கொம்பிலே தாவ அங்குள்ள பூக்கள் உதிரும் என்கிறார்.

"ஆலைஇல்லாதஊருக்குஇலுப்பைப்பூசர்க்கரையாம்"

என்பார்கள். அதாவது கரும்புஆலை இல்லாத ஊரில் இந்த இனிப்புச்சுவை குறைந்த இலுப்பைப்பூவானது சர்க்கரை என்பதே அதன்விளக்கம்ஆகும். இருப்பைப்பூவை தேனுடன் கலந்து குடிக்கும் போது உடல்ஊட்டம்பெறும். இப்பூ ஓர் நோய் நீக்கும் மருந்து. இருப்பைப்பூ நீர்வேட்கையைத் தணிக்கும் ஊட்டஉணவாகும்.

வேள்பாரி புதினத்தில் முருகன் வள்ளி உடனான பாலைநில காதல்வாழ்வில், பாலைநிலத்தின் பின்கோடைவெயில் எண்ணிலடங்காத தாவரங்களை மலரச்செய்கிறது. அதில்

"இருப்பைப்பூவின் இனிப்பு பறவைக்கூட்டங்களை ஈர்த்தது. வேப்பம் பழத்தைத் தின்றகைப்புச்சுவை மாற வௌவால்கள் இலுப்பை மரத்தை விட்டு நீங்காமற் கிடந்தன." என பாலைநில வர்ணனை விளங்கப்படுகிறது.(ப-386) சூடிக் கொள்ளாத பூவாக இருப்பினும் பறவைகளும், மனிதர்களும் விரும்பி உண்ணும்பூவாக இருப்பைப்பூ விளங்குகிறது.

**அலரிப்பூ**

அலரிப்பூ அடுக்குத்தொகுப்பாக அலர்வது விரிவது. இது ஒரு குத்துச்செடி. வெள்ளை, மஞ்சள், சிவப்பு ஆகிய மூன்று நிறங்களில் பூக்கும் இப்பூவின் இலக்கியப்பெயர் கணவிரம். திருமுருகாற்றுப்படையில்

"பெருந்தண்கணவிரநறுந்தண்மாலை" (236, 237)

என்ற அடிகளில் நக்கீரர் பாடியுள்ளார்.

"போதவிழ்அலரிநாரில்தொடுத்துத்

தபங்கிரும்பித்தைபொலியச்சூடி" – (புறம் 371-3,4)

என நாரில் கட்டிக் குஞ்சியில் அழகோடு விளங்கச் சூடியதாகக் கல்லாடனார் பாடியுள்ளர்.

அலரி என்னும் சொல் தற்போது அரளி எனத்திரிந்து வழங்கப்படுகிறது. இம்மலரால் பக்குவப்படுத்தப்படும் மருந்து பலநோய்களைத் தீர்க்கும் என அகத்தியர்குணபாடம் கூறுகிறது. இப்பூ வழிபாட்டிற்கும் மருந்திற்கும் பயன்படுகிறது.

வேள்பாரிபுதினத்தில் முருகன், வள்ளி உடனான பாலைநிலகாதல்வாழ்வில், பாலைநிலத்தின் பின்கோடைவெயில் எண்ணிலடங்காத தாவரங்களை மலரச்செய்கிறது. பாலைநிலத்தின் எந்தவொரு மூலையிலும் இச்சிறுமலர்களைக் காணும் போது வள்ளியின் முகம் மலர்ந்தது "அழிச்சியும், அலரியும், சுள்ளியும், எருக்கும் இங்குமங்குமாக பாலைநிலத்தில் பூத்திருந்தன (ப- 386). இயற்கையிலேயே பெண்கள் மலர்களை விரும்பும் பண்புடையவர்களாக விளங்குகின்றனர். ஆதலால் வறண்ட நிலமான பாலைநிலத்தில் சிறியபூவைக் கண்டவுடன் வள்ளியின் முகம் மலர்ந்ததை ஆசிரியர் அழகுற காட்சிப்படுத்தியுள்ளதை தெரிந்து கொள்ளமுடிகிறது.

**முள்ளிப்பூ**

முள்ளை உடையது என்னும் பொருளில் இதன் பெயர் முள்ளி என அமைந்தது. சூடாமணிநிகண்டு இதற்கு 'முண்டகம்' என்னும் பெயரினை பறைசாற்றுகிறது. கடற்கரையில் மணல்மேட்டில் இப்பூசெடியாக வளர்ந்து பூக்கும்.

"முள்ளிநீடியமுதுநீர்அடைகரை" –(ஐங் - 21:1) என ஓரம்போகியாரும்,

முண்டகங்கெழீஇயமோட்டுமணல்அடைகரை" என வெண்கண்ணனாரும், பிறரும் இதனைக் கடற்கரை மணல்மேட்டில் கண்டுபாடினர். இப்பூ மருதநில வயற்பகுதிகளில் நீரில்வளரும். இதனை நீர்முள்ளி என்றனர். இம்முள்ளிப்பூ நீலநிறங் கொண்டது. இப்பூநெய்தல் நிலத்தில் இளவேனிற் பருவத்தில் நிலப்பூவாக நீலநிறத்தில் பூக்கும். இப்பூ வளைந்த கூரிய முட்களைக் கொண்டது.

வேள்பாரி புதினத்தில் முருகன், வள்ளிக்குமிடையிலான நெய்தல்நிலகாதல் நிகழ்வில் ஐவகை நிலங்களிலும் பயணப்பட்டனர். நெய்தல் நிலத்தின் அலைஓசைகளுக்கிடையில் அவர்களில் காதல் பூத்தது இதனை

“இளவேனில் காலத்துச்சுடுவெயில் உச்சத்தில் இருந்த பொழுது கடற்கரை மணல்வெளியில் முள்ளிமாமலர் பூக்கத் தொடங்கியது. அந்நீலநிறப்பூவைப் பறித்துப் பரண் நோக்கி முருகன் வந்தான்” . (ப – 386) இக்காதல் காட்சிகளே ஒவ்வொரு நிலத்திலும் பூக்களின் மணம் வீசியதை காட்சிப்படுத்துகிறது.

**கூதாளிப்பூ**

கூதாளிப்பூ கொடியினம். குறிஞ்சி நிலத்தில் பூக்கும்பூ. நிகண்டுகள் இப்பூவிற்கு ‘துடி‘ என்னும் மற்றொரு பெயரையும் குறிப்பிடுகின்றன. பசியகுறுகியகாம்புடன்கூடியஇப்பூ உள்துளை கொண்டபூ. இதுஓர் கொடிப்பூ. குறிஞ்சிநிலப்பூ. கூதிர்காலப்பூ. வெண்மைநிறங்கொண்டது. நாகன்போத்தன் என்பார் கைவளை கழன்றுவிழுவதற்கு உவமையாக்கினார்.

“நீர்திகழ்சிலம்பின்ஓராங்கவிழ்ந்த

வெண்கூதாளத்துஅம்தூம்புபுதுமலர்”-(குறுந்- 282 -4 - 8)

எனப்பாடியுள்ளார். இதன் தாதுத்தூள் பொன் நிறமானது. இப்பூவில் உராய்ந்து போன ஒரு பன்றியின் முதுகில் இப்பொன்தாது படிந்து போயிற்றாம்.

“பொன்னுரை கட்டளை கடுப்பப்” (அகம் - 178:9) பன்றியின் முதுகைப் பொன்னை உரைத்துப் பார்க்கும் உரைகல்லாக்கியது இதன் தாதுத்தூள். இப்பொன் தாதைக் கொண்ட கூதாளிமலர்.

கார்ப்பருவம் கடந்து கூதிர்ப்பருவத்தில் கூதாளி பூத்து மணங்கமழும் என்னும் கூற்றங்குமரனார் இதனை கூதிர்க்கூதளம் (நற் - 244:2) என்று கூறியுள்ளதால் இதுகூதிர்பருவப்பூவாகும்.

வேள்பாரிபுதினத்தில் முருகன், வள்ளியின் குறிஞ்சிநிலகாதல்வாழ்வில் கார்காலபூக்கள் குறித்த கருத்துகளை ஆசிரியர் சிறப்பாக வர்ணித்துள்ளமையை தெரிந்த கொள்ள பின்வரும் வரிகள் சான்றுகளாகின்றன.

“நெருப்பையொத்த எறுழம்பூக்களும் சிறுவட்ட இதழ்கொண்ட எருவைப்பூக்களும் வெண்ணிற கூதாளிமலரும் பருத்துப் பேரழகோடு மலரும் புழுகுப்பூக்களும் சூல்வட்டமலையை வண்ணக்குவளையாக மாற்றின.” எனக்கூறுகிறார். (ப- 383) நெருப்பும் சிறுவட்டஇதழும் வெண்ணிறமும் பருத்த பேரழகும் கொண்ட பூக்களை

எல்லாம் தன்னகத்தே கொண்டு பொழிவோடு குறிஞ்சிமலையை குவளையாக சுட்டிக்காட்டியுள்ளார் ஆசிரியர் என்பது புலனாகிறது.

**வேங்கைப்பூ**

சங்கஇலக்கியங்கள் சிறப்பித்துக் கூறும் மிகஉயரமாக வளரும் பெரும்மரம் வேங்கை. மஞ்சள்நிறமான பூக்கள் பூத்தபொழுதில் வேங்கைவரிப்புலியை ஒத்துத்தோற்றம் அளிப்பதால் மகளிர் இதனைப் ‘புலி, புலி’ என்று ஆரவாரம் செய்து கூச்சலிட்டு இம்மரநிழலில் விளையாடுவர்.

வேங்கை மரத்தின் கரியநிறமுள்ள கிளைகளில் மஞ்சளும், மங்கியசெம்மையுமான நிறமுள்ள மலர்கள் கொத்தாகப்பூக்கும்.. ‘வேங்கைமரக் காட்டில் யானைகள் பொருதுகின்றன. பக்கத்தில் இருந்த வேங்கைமரம் சாய்கின்றது. அதில் பூத்திருந்த பூக்களை, அதன் மேலேறாமலே, குறவர் மகளிர் நிலத்திலிருந்து சூடிக்கொள்வர்’ என்றசெய்தியினை

“ஒன்றேனல்லேன்ஒன்றுவன்குன்றத்துப்

பொருகளிறுமிதித்தநெரிதாள்வேங்கை

குறவர்மகளிர்கூந்தற்பெய்ம்மார்

நின்றுகொயமலரும்நாடனொடு

ஒன்றேன்தோழிஒன்றனானே” -(குறுந்-208) என்ற செய்தியினை இப்பாடல் அடிகள் விளக்குகின்றன.

வேள்பாரிபுதினத்தில் வேங்கைமரத்தின் உச்சியில் பரண்அமைத்து ஆரம்பித்த முருகன்வள்ளிகாதல்வாழ்வில் பூக்களும், காதலும் இணைந்தேயிருந்தன. “புல்வெளியின் பெரும்பரப்பைச் சுற்றியிருந்த மலைமுகடுகளில் எண்ணிலடங்காத பூக்கள் பூத்துக்குலுங்கின. வேங்கை மரத்தின் கொத்துப்பூக்கள் கரும்பாறையெங்கும் கொட்டிக்கிடந்தன. அவை மலைத்துளிகளுக்கு இணையாக பூக்களைச் சொரிந்தன.” (ப – 383) குறிஞ்சிநிலகாதல்வாழ்வில் வேங்கைமரமும் அதன் பூக்களும் காதலின் அடையாளமாக ஆசிரியர் வெளிக்காட்டுகிறார்.

**தாழைப்பூ**

'தாழை' என்னும் சொல் தாழாதமலர் வளையாமல் நெளியாமல் தரைநோக்கித் தாழாமல் குத்திட்டு மலரும் மலராகும். இதனால் இம்மலருக்கு தாழைமலர் என்றுபெயர்.

"தாழாதுஉறைக்கும்தடமலர்த்தாழை"(கலி–131:10) என்று கலித்தொகை குறிப்பிடுகிறது.

தாழை, கைதை, கைதகை, கண்டல், முண்டகம், முடங்கல், மடி, முசலி, தெங்கு போன்றவை தாழையைக் குறிக்கும் ஒன்பது சொற்களாகும். குறிஞ்சிப்பாட்டில் 80வது அடியில் தாழை என்னும் சொல்லும் 83 வது அடியில் கைதைஎன்னும்சொல்லும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வீழ்த்தட்டாழை (நற் - 78:4)

வீழ்த்தாழை (பட்டினப்பாலை – 84)

வீழ்த்தாழை (குறுந் - 228 :1)

"முதிர்பூந்தாழை முடங்கல் வெண்டோட்டு" எனச் சிலப்பதிகாரத்தில் (8:49) தாழைமுடங்கியமடல் குறிப்பிடப்பட்டது.

வேள்பாரி புதினத்தில் முருகன்வள்ளியுடனான நெய்தல்நில காதல்வாழ்வில் "கடற்காற்று மேலேறிவந்து தாழைமரங்களுக்கிடையில் கட்டிய ஊஞ்சல் பரணை ஆட்டிவிட்டுச் சென்றது. வள்ளி சொன்னாள் கரையில் இருந்தும் அலையில் மிதக்கிறோம்".(ப-385) முருகனும் வள்ளியும் சேர்ந்திருக்கும் நிலங்களில் அவர்களுக்கு உறைவிடமாக உறுதுணைபுரிவது தாவரங்களே ஆகும் என்பதை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**எறுழம்பூ**

எறுழம் அல்லது எறுழ் என்னும்பூ எரியும் தீயைப்போல இருக்கும். 5-10 மீட்டர் உயரம் வரை வளரும். மருத்துவகுணங்கள் கொண்ட சிறுமரம். வேலக்காய்மரம் என்ற வேறுபெயரும் உண்டு. பெருமழையின் போது பூக்கள்பூக்கும். கபிலர் தன் பாடலில் 'எரிபுரைஎறுழம்' என்றுகூறி இதன் மலர்கள் நெருப்புபோல் ஒளிபொருந்தியதாகும் எனக்கூறுகிறார். இதன்பூக்கள், இலைகள், பழங்கள், பட்டைகள், பிசின், வேர் ஆகிய அனைத்தும் மருத்துவகுணங்கள் கொண்டது. இதன் பூக்களை அரைத்து கசாயம் வைத்து குடித்தால் நோய்எதிர்ப்புசக்தி அதிகமாகும். இதன்பூக்கள் புற்றுநோயை குணமாக்கும் தன்மை

உடையவை. இம்மரப்பட்டையை எலும்புமுறிவு உள்ள பகுதிகளில் தேய்த்துவந்தால் உடைந்த எலும்புகள் உடனடியாய்ச் சேர்ந்துவிடும். மேலும்

“வாளுடைஎறுழ்தோழ் (அகம் - 24)

“காலொறுழொள்வீ( ஐங் - 308)

“தோல்பெயரியஎறுழ” ;(புறம் - 7)

இப்பாடலடிகளில் எறுழம்பூ பற்றிய செய்திகள் எடுத்தாளப்பட்டுள்ளது.

வேள்பாரிபுதினத்தில் முருகன் வள்ளியின் குறிஞ்சிநில காதல்வாழ்வில் கார்காலபூக்களுள் நெருப்பை ஒத்த எறுழம்பூ சிறப்பிடம் பெறுவதை ஆசிரியர் சுட்டுகிறார்.

**கோங்குமலர்**

சங்கப்பாடல்களில் ‘கோங்கம்’ என்று அழைக்கப்பட்ட இம்மரம் தற்போது ‘கோங்கு’ என அழைக்கப்படுகிறது. சூடாமணிநிகண்டில் ‘துருமோற்பலம், கன்னிகாரம்’ எனவழங்கப்பட்டது.

“கொழுங்கோங்குதூங்கு

ஆடகப்பொற்கிழிஅவிழ்க்கும் “என்றார் குமரகுருபரர்.

“கோங்குபொற்குடைகொண்டுஅவிழந்தல்” எனப் பொன்குடையாகப் பாடினார் யசோதரகாவிய ஆசிரியர்.

கோங்கமரம் இக்காலத்தில் வீட்டுப்பொருள்கள் செய்யப் பயன்படுகிறது. இதனால் செய்யப்பட்ட பொருள்கள் இலேசாகவும் வழவழப்பாகவும் மஞ்சள்நிறத்திலும் இருக்கும்.

வேள்பாரிபுதினத்தில் முருகன்வள்ளியின் பாலைநிலகாதல்வாழ்வில் எண்ணிலடங்கா பூக்கள் பூத்தன. “அழிச்சியும், அலரியும், சுள்ளியும், எருக்கும் இங்குமங்குமாகப் பூத்திருந்தபோது பொன்நிற தனிப்பூவை கோங்குஉதிர்த்தபோது அணிலின் முதுகின்மேல் இருக்கும் வரிகளைப் போன்ற ஊகம்பூவும் இணைந்தேகிடந்தது.”(ப-386) பாலைநிலத்தில் எங்கு காணினும் பூக்கள் பூத்துகுலுங்கி உள்ளமையை அழிச்சி, அலரி,

சுள்ளி, எருக்கு, கோங்கு, ஊகம் போன்ற பூக்களின் வாயிலாக ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளமை விளங்குகின்றது.

**எருவைப்பூ**

சிறுவட்ட இதழ்கள் கொண்டபூ எருவைப்பூவாகும். இதன் இலக்கியப்பெயர் எருவை. இதனை 'கோரைப்புல்' என்றும் வழங்குவர். இக்கோரையால் பெண்கள் பாவை செய்து விளையாடுவர்" . ஐங்குறுநூறு இதனை "பஞ்சாய்ப்பாவை" (54-5) என்கிறது.

"எருவையதுநறுந்தோட்டையுடையது" – (குறிஞ்சி -68)

எருவைஎன்பதுசெருவிளை" எனக்குறிஞ்சிப்பாட்டில் இதுகார்காலப்பூ என்பதை சேந்தன்பூதனார் எடுத்தாண்டுள்ளார்.

வேள்பாரிபுதினத்தில் முருகன்வள்ளியின் குறிஞ்சிநிலகாதல்வாழ்வில் கார்காலபூவான சிறுவட்டஇதழ் கொண்ட எறுவைப்பூ எடுத்தாளப்பட்டுள்ளது. (ப- 383)

**கமுகுப்பூ**

மணமுள்ள கமுகுப்பூ மருதநிலத்தில் வளரும் புதர்ப்பூவாகும். இப்பூவின் நரம்புகளின் தொகுப்பு ஒருகுலையாக இருக்கும். எனவே இதனை பூங்குலை எனலாம்.

"கமுகின் பாளையம் பசும்பூ" (பெரும்பாணா-17) எனப்பாளைப்பூவாக உருத்திரங்கண்ணனார் இப்பூவினைப் பாடியுள்ளார். மேலும்இப்

"பூவொடுவளர்ந்தமூவாப்பசுங்காய்

நீரினும்இனியவாகிக்கூர்எயிற்று" (அகம்-335(23-25) என இப்பிஞ்சின் சுவை நீரினை பாடியுள்ளார். வெற்றிலையுடன் தாம்பூலத்திற்கு இதன்காய் சேர்க்கப்படுகிறது. இது மலரும் தோட்டத்தில் வாழும் மகளிர் இப்பூக்களை நரம்புடன் சூடிக்கொள்வர்.

வேள்பாரிபுதினத்தில் காலநேரமின்றி மிதந்து கொண்டிருந்த முருகன் வள்ளியின் மருதநிலவாழ்வில் "தவிப்புநீங்கா அதிகாலையில் பின்பனிப்பருவத்துப்புதுமலரான கமுகின் சிறுபூவெடுத்து வள்ளிக்குச்சூட்டினான்." (ப-385). அகவாழ்வில் பூக்கள் நீங்கா இடம்பெறும் தன்மை உடையது என்பதனை மேற்கண்டவரிகள் விளக்குகின்றன.

## முடிவுரை

காலத்தால் பூத்த மலர்கள் கண்ணுக்கு அழகும், கருத்துக்கு இன்பம் தருகின்ற அழகியகாட்சிபோல் தமிழிலக்கிய வரலாற்றில் படைக்கப் பெற்ற பல்வேறு இலக்கியங்கள் அழகிய பூந்தோட்டமாக நமது வாழ்க்கைக்கு காட்சியளிக்கிறது. இப்புதினத்தில் கார்காலம் மற்றும் முதுகோடைகாலத்தில் எண்ணிலடங்காபூக்கள் பூப்பதற்கும் இயற்கையே காரணமாக அமைந்துள்ள அறிவியல் சிந்தனையை இப்புதினத்தின் மூலம் நாம் அறியலாம். கார்கால பூக்களாக வேங்கை, கடம்பு, எறுழம், காந்தள், எருவை, கூதாளி, புழுகு போன்ற பூக்களும் வேனிற்கால பூக்களாக தாழை, முள்ளி, அழிச்சி, அலரி, சுள்ளி, எருக்கு, இரும்பை போன்றவற்றை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். தலைவன் தலைவியுடனான அகவாழ்வில் பூக்கள் அன்பின் வெளிப்பாடாகவும் வெளிப்படுவதை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது. இயற்கையின் எல்லாமாற்றங்களிலும் தங்கள் இணையின்மீதான காதலை வெளிப்படுத்தும் அடையாளமாக பூக்கள் விளங்குகின்றன.

## மேற்பார்வைநூற்கள்:

1.பிங்கலநிகண்டு மூலமும் உரையும். (1917) சென்னை: மதராஸ்ரிப்பன் அச்சியந்திரசாலை.

2.கோவைஇளஞ்சேரன். (2013) இலக்கியம் ஒரு பூக்காடு, சென்னை: இராக்போர்ட்பப்ளிகேசன்.

3.சூடாமணி நிகண்டு(1999) தஞ்சாவூர்: சரசுவதிமகால்நூலகம்,மரம் 63:2

4.புலியூர்க்கேசிகன்(2019). புறநானூறு மூலமும்உரையும் - 2:1-6. சென்னை:சாரதாபதிப்பகம்-7வதுபதிப்பு–342:1 2

5.சோமசுந்தரனார் பொ வே. (1979) சிலப்பதிகாரம் மூலமும் உரையும். சென்னை:கழகவெளியீடு

6.மாணிக்கவாசகன் ஞா.(2016) பத்துப்பாட்டு மூலமும் விளக்கமும்,பா- 93 - 96. சென்னை :உமாபதிப்பகம் 3வதுபதிப்பு -.

7.புலியூர்க்கேசிகன். (2010) நற்றினை,பா-91.சென்னை: சாரதாபதிப்பகம், முதல்பதிப்பு

8.புலியூர்க்கேசிகன்.(2019) குறுந்தொகை,பா - 4(66 – 70). சென்னை: சாரதாபதிப்பகம், 7வதுபதிப்பு.

9.திருமுருகாற்றுப்படை(1949) சைவசமயபக்தஜனசபைவெளியீடு, சென்னை: அல்லயன்ஸ்பிரஸ்

10.சாமிபிஎல்1967)சங்கஇலக்கியத்தில் செடிகொடி விளக்கம், திருநெல்வேலி: திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

11.புலியூர்க்கேசிகன்.(2019) பாபரிபாடல் மூலமும் உரையும், - 4(66 – 70). சாரதாபதிப்பகம்,சென்னை-7வதுபதிப்பு .

12.வேங்கடசாமிநாட்டார் ந மு (1972)அகநானூறு, சென்னை: சாரதாபதிப்பகம்.

13.இராசமாணிக்கனார் மா (2011). கலித்தொகை, சென்னை: பூம்புகார்பதிப்பகம்.

14.இராகவையங்கார் ரா (1951) பட்டினப்பாலை ஆராய்ச்சியும் உரையும், மதுரை: தமிழ்நாடுபிரஸ்.

15.கலைமகள்சி(1992).மலைபடுகடாம், சென்னை: பக்கிரிஅம்மாள்பதிப்பகம்.

16.புலவர்கோவிந்தனார் கா (1996). பெரும்பாணாற்றுப்படை விளக்கவுரை, சென்னை: வெற்றிஅச்சகம்.

17.ஔவைதுரைசாமிப்பிள்ளை சு.(1941) சீவகசிந்தாமணிசுருக்கம், சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

18.வெங்கடேசன் சு. (2018) வீரயுகநாயகன்வேள்பாரி, சென்னை: விகடன்பிரசுரம், முதல்பதிப்பு .

19.ஜெகத்ரட்சகன்எஸ் (2007). யசோதரகாவியம், சென்னை: ஆழ்வார்கள் ஆய்வுமையம்.

20.புஷ்பா ம ந (2002). குறிஞ்சிப்பாட்டு தாவரங்கள் தொகுப்பேடு, சென்னை: அரசுதொல்லியல் அருங்காட்சியகஆணையர்.

**License**

Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.